சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **32/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | சுப்பிரமணியன் |
| தந்தை பெயர் | : | அன்னதுரை |
| கிராமம் | : | பனவடலிசத்திரம் |
| தாலுக்கா | : | சங்கரன்கோவில் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| வயது | : | 31 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது விருதுநகர் மாவட்டம் தளவாய்புரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளரக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2025 ம் தேதியன்று வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது

செம்மங்குடி புது தெருவை சேர்ந்த அழகேசன் மகன் சுந்தரராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 ஆன புகாரினை பெற்று நிலைய மனு எண் 107/2025 என எண்ணிடப்பட்டு, விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். அந்த மனு ரசீதுவின் ஒப்புகை சீட்டு **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக 04.04.2025ம் தேதியன்று காவல் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்தார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகாரை யார் எழுதியது என்றால் - புகார்தாரர் நிலையம் ஆஜராகி நேரில் கொடுத்தார், புகார் யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. புகார் யார் எழுதியது என்ற விபரத்தை நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் - விசாரிக்கவில்லை. புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு யார்யார் வந்தார்கள் என்றால்- புகார்தாரரே நேரில் வந்தார். அவருடன் யார் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. புகார் எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்றால் - புகார் 17.30 மணிக்கு பெறப்பட்டது. அ.சா-ஆ.3 ஆன புகார் மனு ரசீதினை யார் தயார் செய்தார்கள் என்றால் -நான்தான் தயார் செய்தேன். புகார் கொடுத்த அப்பொழுதே அ.சா.ஆ.3 ஐ நான் தயார் செய்து புகார்தாரருக்கு வழங்கினேன். அவ்வாறு புகார் மனு ரசீது வழங்கியதற்காக அப்பொழுதே நான் புகார்தாரரிடம் அந்த மனு ரசீதில் கையொப்பமும் பெற்றேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.3 இல் உள்ள கையொப்பம் என்பது என்னிடம் புகார் கொடுத்தவர் கையொப்பம் செய்து கொடுத்தார். அ.சா.ஆ.1ல் உள்ள கையொப்பமும், அ.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பமும் வெவ்வேறானது என்றால் - அ.சா.ஆ.3 இல் புகார்தாரர் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார். அ.சா.ஆ 1லும், அ.சா.ஆ.3 லும் உள்ள கையொப்பங்களில் வேறுபாடு உள்ளது சம்மந்தமாக நான் ஏதேனும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அ.சா.1க்கு Medical Memo ஏதேனும் வழங்கினேனா என்றால - இல்லை. அ.சா.1க்கு Medical Memo அவர் கேட்கவில்லை, அதனால் நான் வழங்கவில்லை. அ.சா.1க்கு குறிப்பிடத்தக்க காயம் இருப்பதாக நான் எதுவும் கண்ணுறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 எப்பொழுது தயார் செய்யப்பட்டது என்றால் 17.02.2025ம் தேதியன்று மாலை 06.09 மணிக்கு தயார் செய்துள்ளேன். சொன்ன நாள், நேரத்தில், காவல் நிலையத்தில் வைத்து எந்த

புகாரும் வழங்கப்படவுமில்லை, பெறப்படவுமில்லை என்று சொன்னால் சரியல்ல. அப்புகாருக்கு நான் மனு ரசீது வழங்கியதாக சொல்வதும் தவறு என்று சொன்னாலும் சரியல்ல. செம்மங்குடி ஊராட்சி மன்ற தலைவரான செந்தமிழ்செல்வி அவர்களின் கணவர் முனுசாமி என்பவர் இந்த எதிரியை பழி வாங்கும் பொருட்டு தனது செல்வாக்கினை பயன்படுத்தி எங்கள் காவல் நிலையத்தில் பின்நாளில், முன் தேதியிட்டு கொடுத்த புகாரினை அத்தவறினை சரி செய்யும் பொருட்டு முன்னால் புகார் கொடுக்கப்பட்டது போல் பொய்யாக ஒரு மனு ரசீது தயார் செய்துக்கொள்ளப்பட்டு, பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கொள்ள எங்கள் ஆய்வாளருக்கு நான் உறுதுணையாக ஒரு தவறான ஆவணத்தினை தயார் செய்து கொடுத்து அதனை அனுசரித்து உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.3 ஆவணத்தை வழக்கிற்காக உண்மைக்கு மாறாக தயார் செய்யப்பட்ட ஒரு பொய்யான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.07 16:06:24 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.